www.padippakam.com



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

**தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்**

**வரலாற்றுத் தொடர்**

1

"மனிதன் குரங்கிலிருந்து தோற்றம் பெற்றவன்" என்பது ஒரு விஞ்ஞான முடிவு. இதை நிறுவியவர் சார்ள்ஸ் டார்வின் என்ற விஞ்ஞானி.

19-ம் நூற்றாண்டில் அவர் இந்த உண்மையை நிறுவுவதற்கு முன்பே ..."மனிதன் அதாவது இலங்கை மனிதன் பேய், பிசாசுகளில் இருந்து தோற்றம் பெற்றவன்" என்ற மாபெரும் வரலாற்று உண்மையை கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் மகாவம்சம் என்ற வரலாற்று நூலை எழுதிய பௌத்த பிக்கு கண்டுபிடித்து விட்டார்.

'மனிதன் குரங்கிலிருந்து தோற்றம் பெற்றவன்' என்ற தனது கருத்தை நிறுவ நிறைய ஆராய்ச்சிகள் செய்தவர் - நீண்டகாலம் சிரமப்பட்டவர் டார்வின். பாவம் அவருக்கு அந்தக் காலத்தில் மகாவம்சம் பற்றி ஒன்றும் தெரியாது போலிருக்கின்றது. தெரிந்திருந்தால் பேய் பிசாசுகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து, பேய் பிசாசுகளும் குரங்கும் சேர்ந்துதான் மனிதன் தோன்றினான் என்ற சுலபமான முடிவுக்கு அவர் வந்திருப்பார்.

## மானுடவியல் வரலாறு

இலங்கையின் மானுடவி ...ல் வரலாறு 30 ஆயிரம் ஆண் ...களைக் கொண்டது என்று ...ன்று அறியப்பட்டுள்ளது. ...னால் பௌத்த சிங்கள வர ...ற்று நூலான மகாவம்சம் .... 6 ஆம் நூற்றாண்டில் விஜ ...து வருகையோடுதான் இல ...கயின் வரலாறே ஆரம்பிப் ...கச் சொல்கின்றது. அதா ... நாகரீக மனிதன் என்று ...யாளப் படுத்தப்பட்ட ...ர்களின் வரலாறு 2600 ஆடுகளை மட்டுமே கொண் ...என அது சொல்கின்றது. அதற்கு முன் அதாவது விஜயன் வருவதற்கு முன் அங்கு வாழ்ந்த இயக்கரும் - நாகரும் நாகரீகமற்றவர்கள், மந்திர தந்திரங்களில் வல்லவர்கள், மாய மாயமாய் மறைந்துபோகும் பேய் பிசாசுகள் என்றும் வட இந்தியாவிலிருந்து வந்த ஆரிய இனத்தைச் சேர்ந்த விஜயன் இயக்கர் இனப்பெண்ணான குவேனியை மணந்து கொண்ட பின்பே நாகரீக இனம் தோன்றியதாக அது குறிப்பிடுகின்றது.

## மகாவம்சத்தைப் பொய்யாக்கும் சான்றுகள்

'இலங்கைத் தீவின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆய்வில் கிடைக்கப் பெற்ற சான்றுகளும், அவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மானுடவியல் சமூகவியல் ஆய்வுகளும் இலங்கையில் வாழ்ந்த காலத்தால் முந்திய மக்கள், இடைக்கற்கால பண்பாட்டிற்கு (MESOLITHIC CULTURE) உரிய மக்கள் என அடையாளம் காட்டியுள்ளன.'

"இந்த மக்கள் மலைநாடு தொட்டு தாழ் நிலப் பகுதிகளிலுள்ள நீர் நிலைகளையும், கடற்கரைப் பகுதிகளையும் அண்டி ஓரளவு செறிவாக வாழ்ந்துள்ளார்கள் என்பதை இரத்தினபுரி பலாங்கொடை, கித்துள்கொட், அநுராதபுரம், முல்லைத்தீவு, திருக்கோணமலை, மாங்குளம், மாதோட்டம், பூநகரி ஆகிய இடங்களில் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. இப் பண்பாட்டு மக்களுக்கும் தமிழ்நாடு, திருநெல்வேலி, தேரி (மணற்குன்றுகள்) கலாச்சார மக்களுக்குமிடையில் மொழி, இனம், ஆயுதத் தொழில் நுட்பம் என்பவற்றில் அதிக ஒற்றுமை காணப்படுகின்றது. இலங்கையில் இப் பண்பாட்டின் தோற்றம் கி.மு. 28000 ஆண்டுகள் எனவும், தமிழ் நாட்டில் இப்பண்பாட்டின் தோற்றம் கி.மு. 30 ஆயிரம் ஆண்டுகள் எனவும் சீ14 காலக் கணிப்பு மூலம் அறியப்பட்டுள்ளது. இதனால் இலங்கையின் ஆதிகால மக்கள் தமிழ் நாட்டில் இருந்து புலம் பெயர்ந்திருக்கலாமென தொல்லியலாளர்கள் கருதுகின்றனர். மகாவம்சம் கூறும் இயக்கர் நாகரை இப் பண்பாட்டு மக்கள் எனக்கருதும் மானிடவியலாளர்கள் இவர்களைத் தென்னிந்தியாவில் வாழ்ந்த ஆதி ஒஸ்ரலோயிட் இன வர்க்கத்தைச் சேரந்தவர்கள் எனக் கூறுகின்றனர்."

*(ஆதிகால இலங்கைத் தமிழர் வரலாறு ப.புஸ்பரத்தினம் சிரேஸ்ட வரலாற்றுத் துறை விரிவுரையாளர் யாழ் பல்கலைக் கழகம்)*

## திராவிடப்பண்பாடு

ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பிருந்தே இந்தியாவில் வாழ்ந்து வந்த திராவிட மக்களுக்குரித்தான பெருங்கற்கால பண்பாட்டுச் சின்னங்கள் (Megalithic Culture) திச மாறகம, அநுராதபுரம், பொம்பரிப்பு (புத்தளம்), மாந்தை, வவுனியா, கதிரவெளி (மட்டக்களப்பு), கந்தரோடை, ஆனைக் கோட்டை, வல்லிபுரம், பூனகரி ஆகிய இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

"பெருங்கற்காலப் பண்பாடு என்பது திராவிட மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்யப்பின் பற்றிய ஒரு பண்பாட்டு அம்சத்தைக்குறிப்பதாகும். இவ் வடக்க முறை நாட்டின் பௌதீகத் தன்மைக்கேற்ப கற்களையும் தாழிகளையும் பயன்படுத்தி பல்வேறு வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன."

"இவ்வடக்க முறையில் இறந்தவர்கள் வாழ்ந்த காலத்திற் பயன்படுத்திய பல பொருட்களையும் சேர்த்து அடக்கம் செய்யப்பட்டுள்ளதனால் இவை பற்றிய ஆய்வானது அக்கால மக்களது பண்பாடு பற்றிய ஆய்வாக அமைகிறது. இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் இப் பண்பாட்டுடன் தான் அரசுகளின் தோற்றம், நீர்ப்பாசனத்துடன் கூடிய விவசாயம், இரும்பின் உபயோகம், கறுப்புச் சிவப்பு மட்பாண்டப் பயன்பாடு என்பன தோற்றம் பெற்றுள்ளன. இலங்கையில் பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இப் பண்பாடு பற்றிய சான்றுகள், இலங்கையின் நாகரீக வரலாறு சிங்கள மக்களின் மூதாதையரான வட இந்தியத் தொடர்பால் ஏற்பட்டதென்ற பாரம்பரியக் கருத்தை முற்றாக நிராகரித்துள்ளது."

"இப் பண்பாடு தொல்லியல், மானுடவியல், சமூகவியல் ரீதியாக தென்னிந்தியாவுடன்- சிறப்பாகத் தமிழ்நாட்டுடன்-நெருங்கிய ஒற்றுமைத் தன்மையைக் கொண்டுள்ளது. அதிலும் ஆதிச்ச நல்லூருக்கு எதிரே அமைந்த மாந்தையும், அரிக்க மேட்டுக்கு எதிரே அமைந்த பொம்பரிப்பும் ஒரு பிராந்தியம் எனக் கூறக்கூடிய அளவுக்கு இப் பண்பாட்டில் அதிக ஒற்றுமை இருப்பதாக தொல்லியலாளர்கள் கூறுகின்றனர்.'

*(ஆதிகால இலங்கைத் தமிழர் வரலாறு, ப.புஸ்பரத்தினம் சிரேஸ்ட வரலாற்றுத்துறை- விரிவுரையாளர் யாழ்பல்கலைக் கழகம்)*

உண்மையில் இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால் பண்பாட்டுச் சின்னங்கள் கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே (விஜயன் வருவதற்கு 400 வருடங்களுக்கு முன்பிருந்தே) திராவிட மக்கள்-அதாவது தமிழ் மக்கள்-இலங்கையில் நாகரீகமுள்ள ஒரு இனமாக வாழ்ந்து வந்ததை நிரூபித்துள்ளன. இலங்கையின் மானுடவியல் வரலாறு இடைக்கற்காலப் பண்பாட்டின் படிமுறை வளர்ச்சியினூடாக பெருங்கற்காலப் பண்பாட்டிற்கு வளர்ச்சி பெற்றதையே காட்டுகின்றது. மகாவம்சம் குறிப்பிடுவது போல் ஆரியரது வருகையின் மூலமோ, ஆரியக் கலப்பின் மூலமோ வரலாற்றில் ஒரு பாச்சலோ திருப்பமோ ஏற்பட்டது என்று சொல்வதில் உண்மையில்லை.

## விஜயனது வருகை

கி.மு. 6-ம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து விஜயனும் அவனது 700 நண்பர்களும் இலங்கைக்குச் சென்றதாக மகாவம்சம் கூறுகின்றது. ஆனால் இது பற்றிய தொல்லியல் சான்றுகள் இலங்கையிலோ அவனது பூர்வீக நாடாகச் சொல்லப்படுகிற வட இந்தியாவிலோ எதுவும் இல்லை. கி.பி. 6 ஆம் நூற்றாண்டில், அதாவது விஜயன் வந்ததாகச் சொல்லப்படுகிற காலத்தில் இருந்து 1200 வருடங்களுக்குப் பின், மகாவம்சத்தை எழுதிய பௌத்த பிக்கு பௌத்த சிங்களவர்களை ஆரியர் என்று அழைப்பதற்காக உருவாக்கிய புனைகதை என்றே இது கருதப்படுகின்றது.

**ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பிருந்தே இந்தியாவில் வாழ்ந்து வந்த திராவிட மக்களுக்குரித்தான பெருங்கற்கால பண்பாட்டுச் சின்னங்கள் (Megalithic Culture) திச மறகம, அநுராதபுரம், பொம்பரிப்பு (புத்தளம்), மாந்தை, வவுனியா, கதிரவெளி (மட்டக்களப்பு), கந்தரோடை, ஆனைக்கோட்டை, வல்லிபுரம், பூநகரி, ஆகிய இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.**

18 ஆம் நூற்றாண்டில் மயில்வாகனப் புலவரால் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவ மாலை கூட இலங்கையை இராட்சதர் நாடென்றும் விஜயனே அங்கு மக்களைக் குடியேற்றினான் என்றும் கீழ்கண்டவாறு சொல்லுகின்றது

"இன்றைக்கு 2400 வருசங்களுக்கு முன் இவ் விலங்கை நாடு யானை, கரடி, புலி, மிருகங்கள் சஞ்சரிக்கும் பெருவனாந்தரமாக இருந்தது. அவ் வனாந்தரத்திலே சில வேடர்களேயன்றி யாதொரு மானுட சீவனும் இருந்ததில்லை. அக்காலத்திலே வங்கதேசத்து சத்திய மரபில் பிறந்த இலாட தேசத்தை அரசாண்ட சிங்கவாகுவின் குமாரன் விஜயன் என்பவன் மகா துஷ்டனாயிருந்ததால் அவனைப் பிதாவாகிய சிங்கபாகு துரத்திவிட, அவன் புறப்பட்டு அங்குமிங்கும் போக, ஒருவரும் இடம் கொடாததனால் காசிக்குப் போய் அங்கேயிருந்தான்.

"அவ்விடத்தில் விஜயகுமாரனுக்கு 'நீ இலங்கை நாட்டின் மத்தியில் உள்ள கதிரை மலையிற் போயிரு. அந்த நாடு உனக்குரியது' எனச் சொப்பனத்தில் உத்தரவு கிடைத்ததனால் அவன் நீலகண்டாச்சாரியார் என்னும் குருவை அழைக்க, அவர் பத்தினியாகிய அகிலாண்டவல்லியம்மாளையும், புத்திர புத்திரிகளையும், மருமக்களையும் கூட்டிக் கொண்டு வந்து தன் பரிவாரங்களுடன் கதிரை மலையில் சேர்ந்தான்.'

"அக் காலத்தில் இலங்கையில் குடிசனங்கள் யாருமில்லாததனால், விஜயராசன் குடிகளை அழைத்து குடியேற்றக் கருதி பல முயற்சிகளை செய்வித்தான். இலங்கை இராட்சத நாடாயிருந்ததனால் அவ்விடத்துக்கு வரமாட்டோம் என்று கன்னியாகுமாரி தொடங்கி இமயமலை பரியந்த மிருந்த அனைவரும் மறுத்துப் பேசினார்கள். அக்காலத்திலே மகதநாட்டுச் சனங்கள் அநேகர் புத்த சமயத்திற்குட்பட்டதனால், மகதராசன் அவர்களை அந்நாட்டை விட்டுத் துரத்திவிட அவர்களிற் சிலர் இமயமலைக்கு வடதிசையில் போயிருந்தனர். பலர் பிரம்மபுத்திர நதியை கடந்து கிழக்கே போய் பிரம்ம தேசத்தை சேர்ந்த சியம் முதலிய நாடுகளில் அலைந்து திரிந்தார்கள். அந்தச் செய்தியை விஜயராசன் அறிந்து, அவ்விடஞ் சென்று அவர்களின் பல குடிகளை அழைத்து வந்து, இலங்கையின் எத்திசையிலும் குடியேற்றி, நகரப் பிரதிஷ்டை செய்து அரசாட்சியை ஆரம்பித்தான். அந்தப் புத்தர்கள் சிங்களம் என்னும் பெயருள்ள இலங்கையிற் குடியேறித்தான் சிங்களர் எனப் பெயர் பெற்றார்கள்."

யாழ்ப்பாண வைபமாலை சொல்லும் இந்தக் கதை உண்மையில் மகாவம்சத்தின் தழுவலே. மகாவம்சத்திலே குறிப்பிடாத ஒன்று; விஜயன் காசியிலே சென்று தங்கியிருந்த பகுதி. மற்றப்படி மகாவம்ச ஆசிரியரும் யாழப்பாண வைபவ மாலை ஆசிரியரும் விஜயனது வருகை என்ற ஆரியத் தொடர்பை தங்கள் தங்கள் மதத்திற்கு சார்பாகவும் பெருமையாகவும் காட்ட முயன்றதில் ஒற்றுமைப் பட்டிருக்கின்றனர்.

விஜயன் பௌத்த மதத்தைச் சேர்ந்தவன் என்று சொல்ல முடியாத மகாவம்ச ஆசிரியர் புத்தர் பரிநிர்வாணம் அடைந்த தினத்தன்று அவன் இலங்கைக்கு வந்ததாக சொல்லிக் கொள்கின்றார். ஆனால் யாழ்ப்பாண வைபவமாலை ஆசிரியரோ விஜயனை இந்து மதத்தவன் என்று காட்டி காசிப் பிராமணர்களுடன் அவனை தொடர்புடையவனாக்க முயல்கின்றார்.

"குடிகளை வசப்படுத்திக் கொள்ளும் நோக்கினால் விஜயராசன் சமய வழிபாட்டை குறித்துச் சனங்களுக்கு இஷ்டங் கொடுத்திருந்தும் தன் சமயசாரவொழுக்கத்தை தவறாமல் காத்துக்கொண்டான் அரசாட்சியை ஆரம்பிக்க முன்னமே விஜயராசன் தன் ஆட்சிக்குப் பாதுகாப்பாக நாலு திக்கிலும் நாலு சிவாலயங்களை எழுப்பிக் கொண்டான்'........

...... 'அவ் ஆலயங்கட்குப் பூசனை நடாத்தும்படி நீலகண்டாச்சாரியாரின் மூன்றாங் குமரன் வாமதேசாச்சாரியன் என்னும் காசியிற் பிராமணனையும் அவன் பன்னி (மனைவி) யாகிய விசாலாட்சி அம்மாளையும் அழைப்பித்து அக்கிரகாரம் முதலிய வசதிகளும் கொடுத்து இருத்தி வைத்தான்'..... *(யாழ்ப்பாண வைபவமாலை பக். 6)*

பௌத்த மதத்திற்கும் பார்ப்பனிய மயப்படுத்தப்பட்ட இந்து மதத்துக்குமிடையிலான ஆதிக்கப்போட்டியில் பௌத்த சிங்களவர்கள் தங்களது முன்னோடி என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்ட விஜயனை பார்ப்பன ஆதரவாளனாகவும், இந்து மத காவலனாகவும் காட்ட யாழ்ப்பாண வைபவமாலை ஆசிரியரான மயில்வாகனப் புலவர் முனைந்திருக்கின்றார்.

உண்மையில் மகாவம்ச ஆசிரியரைப் போலவே மயில்வாகனப் புலவராலும் விஜயனது காலத்திற்கு முன்பிருந்தே இலங்கையில் வாழ்ந்த பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய தமிழ் மக்களது வரலாறு மறைக்கப்பட்டிருக்கின்றது.

**- நக்கீரன்**